

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.11.2024) அமெரிக்காவில் நடைபெற்ற 6வது உலக கோப்பை கேரம் போட்டியில் தங்கம் வென்ற எம். காசிமா (பெண்கள் ஒற்றையர், இரட்டையர் மற்றும் குழு பிரிவுகள்), வி. பி. மித்ரா (பெண்கள் இரட்டையர் மற்றும் குழு பிரிவுகள்) மற்றும் கே. நாகஜோதி (பெண்கள் இரட்டையர் பிரிவு வெள்ளி மற்றும் குழு போட்டி தங்கம்) ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் பயிற்சியாளர் மரிய இருதயம் ஆகியோர் உடனிருந்தனர்.



கோவை வடக்கு மாவட்டம் கவுண்டம்பாளையம் பகுதி கழக 34வது வட்டத்தை சேர்ந்த பா.ஜ.க.வினர், துரை தலைமையில், அக்கட்சியில் இருந்து விலகி தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி முன்னிலையில் திராவிட முன்னேற்ற கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். இதில் கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொ.அ.ரவி, மாநகர் மாவட்ட செயலாளர் நா.கார்த்திக் உள்ளிட்ட கழகத்தினர் உள்ளனர்.

### 24ம் தேதி மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தரும்

# துணை முதல்வர் உதயநிதிஸ்டாலினுக்கு மாவட்ட எல்லையில் சிறப்பான வரவேற்பு!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மயிலாடுதுறை. நவ.23-

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன் தலைமை தாங்கினார். கழக சிர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி, கண்ணகிபன்னீர், மாவட்ட பொருளாளர் மகா.அலெக்சாண்டர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட உள்ள தீர்மானங்கள் குறித்தும், மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் பேசினார். கூட்டத்தில் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மங்கை எம்.சங்கர், என். இளையபெருமாள், செல்ல. சேதுரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், ஞான.இமையநாதன், மலர்விழிதிருமாவளவன், பஞ்சு.குமார், அமிர்த.விஜய குமார், ஏ. ஆர்.ராஜா, ஏ.ஜி.ஜெ.பிரபாகரன், கு.வைத்தியநாதன், நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என். செல்வராஜ், ம.சுப்பராயன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், நத்தம் ஏ.வின்சென்ட், பி.கென்னடி, அ.காந்தி, எஸ். சங்கரநாராயணன், ஜெ.கபிலன், எஸ்.சுவாமிநாதன், ஹர்ஷத், சுபாநெடுஞ்செழியன், எஸ்.சங்கரநாராணயன், வைத்தீஸ்வரன்கோயில் எஸ்.சுவாமிநாதன், கபிலன், பேரூர் செயலாளர்கள் எம்.சம்சுதீன், என்.அண்ணாதுரை, எஸ்.கே.முத்துராஜா உள்ளிட்டார் கலந்து கொண்டனர்.



கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் துணை முதல்வர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் 24.11.2024 அன்று மயிலாடுதுறையில் நடைபெற உள்ள மேலையூர் முத்து.தேவேந்திரன் இல்ல திருமண வரவேற்ப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வருகை தரும் தமிழ்நாடு அரசின் துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்ட எல்லையான பொறையார் ராஜிவ்காந்தி சிலை அரகே 24.11.2024 அன்று பிறகல் 2.00 மணிக்கு மாவட்டக் கழகம் சார்பில் அளிக்கப்படும் மாபெரும் சிறப்பான வரவேற்ப்பு அளிப்பது என்றும், இந்த மாவட்ட எல்லை வரவேற்ப்பு நிகழ்ச்சியில் 5,000 த்திற்கும் மேற்பட்ட கழகத்தினர் கலந்து கொள்ள செய்திடுவது என்றும். இந்த வரவேற்ப்பு நிகழ்ச்சியில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்ட மன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர் பெரும் அளவில் கலந்து கொள்ள வேண்டும் என்றும், இதற்கான ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் சிறப்பாக செய்திட வேண்டும் என்றும்,

ஒற்றை செங்கல்லால் ஒன்றிய அரசின் முகமூடியை கிழித்து ஒன்றிய அரசை அதிர வைத்த திராவிட மாடல் அரசின் துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் பிறந்த நாள் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வது என்றும், துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளான வரும் 27.11.2024 அன்று மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளை, வார்டுகள் தோறும் கழக கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கியும், ஏழை எளியவர்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்கியும், ஆதரவற்ற இல்லங்களில் உள்ள குழந்தைகள், முதியவர்களுக்கு புத்தாடை, உணவு வழங்கியும், மரக் கன்றுகள் நட்டும், வழங்கியும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, பேனா உள்ளிட்ட எழுது பொருட்கள் வழங்கியும், மாவட்டத்தில் 10 இடங்களில் மருத்துவ முகம், 10 இடங்களில் இரத்ததான முகாம், 5 இடங்களில் இலவச கண்சிகிச்சை முகாம் நடத்தி சின்னவர் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவது என்றும்,

கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க தேர்தல் ஆணைத்தால் நடத்தப்பட்ட சிறப்பு வாக்காளர் சேர்ப்பு முகாம் கடந்த 16 மற்றும் 17ம் தேதியில் அதிக அளவில் கழகத்தினர், கழக ஆதராவாளர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ந்த கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் ஆகியோருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு வரும் 23.11.2024 மற்றும் 24.11.2024 ஆகிய தேதிகளில் நடைபெறும் சிறப்பு முகாமில் இன்னும் சேர்க்க வேண்டிய வாக்காளர்களை சேர்த்திட வேண்டும் என்றும், வாக்காளர் சேர்த்த விவரப் பட்டியலை தலைமைக் கழகத்திற்கு அனுப்பிட வரும் 28.11.2024 அன்றுக்குள் மாவட்டக் கழகத்திடம் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் வழங்கிட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம்.

இதுவரை 11 சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற்று முடிந்துள்ள நிலையில், மண்டலம் 4, 7 – இல் உள்ள கீழ்க்கண்ட சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 23/11/2024 சனிக்கிழமை | காலை 9.00 மணி | 7 | வேதாரண்யம் | சிம்பு மீரா திருமண மஹால், நாகை சாலை, வேதாரண்யம். |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 19-11-2024

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

### அன்பில் மகேஷ்பொய்யாமொழி தலைமை!

### என்.கௌதமன் முன்னிலை! ஏ.கே.எஸ்.விஜயன் வரவேற்புரை!

# அக்கரைப்பேட்டை ஜி.மனோகரன் இல்லத் திருமண விழா!

## துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் தலைமை தாங்கி நடத்தி வைக்கிறார்!

நாகை, நவ.23-

நாகை மாவட்டம் நாகை தெற்கு ஒன்றியம் அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த மாநில மீனவர் அணி துணைச் செயலாளர், தமிழ்நாடு மீனவர் நல வாரிய உறுப்பினர் அக்கரைப்பேட்டை ஜி.மனோகரன் இல்ல திருமண விழா நாளை (24.11.2024 - ஞாயிறு) காலை கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்றுகிறது.

நூகை மாவட்டம் அக்கரைப்பேட்டை மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், அக்கரைப்பேட்டை ஊராட்சி மன்ற தலைவர் அழியாநிதிமனோகரன் இணையர்களின் மகன் டாக்டர் எம்.குறளரசன், காரைக்கால் மாவட்டம் காரைக்கால்மேடு எஸ்.சந்திரன்(எ) பெரமசாமிசத்யா இணையர்களின் மகள் டாக்டர் பி.பிருந்தாஞ்சலி ஆகியோர் திருமணம் 24..11.2024 அன்று காலை 10 மணிக்கு நாகை பி.வி. என். திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. திருமண விழாவிற்கு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ்பொய்யாமொழி தலைமை தாங்குகிறார். நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் முன்னிலை வகிக்கிறார். தமிழ்நாடு அரசு டெல்லி சிறப்பு பிரதிநிதியும், மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் வரவேற்புரையாற்றுகிறார். மண விழா தலைவரான துணை முதல்வர் உதயநிதிஸ்டாலினை தாட்கோ தலைவர் உ.மதிவாணன் முன்மொழிகிறார். அதைத் தலைமைச் செயற்குழு உறுப்பினரும், நாகை தெற்கு ஒன்றியச் செயலாளர் க.ராஜேந்திரன் வழிமொழிகிறார். எம்.குறளரசன்பி.பிருந்தாஞ்சலி திருமணத்தை கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் தலைமை தாங்கி நடத்தி வைக்கிறார். திருமண விழாவில் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சரும் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடைத்துறை அமைச்சர் அனிதாராதாகிருஷ்ணன், தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா, உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன், கழக செய்தி தொடர்பு செயலாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆளூர். ஷநவாஸ், நாகை மாலி, கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், குத்தாலம் பி.கல்யாணம், மாவட்டக் கழகச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம்,

பூண்டி கே.கலைவாணன், நிவேதா எம்.முருகன், துரை.சந்திரசேகரன், கா.அண்ணாதுரை, ஏ.எம். எச்.நாஜிம், தமிழ்நாடு மீனவர் பேரவை நிறுவனத் தலைவர் இரா.அன்பழகன், ஊரக மருத்துவ நலப்பணிகள் இயக்குநர் ஜெயராஜமூர்த்தி, கழக மீனவர் அணி செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின், சட்ட மன்ற உறுப்பினர்கள் கே.பி.சங்கர், மு.பன்னீர்செல்வம், என்.அசோக்குமார், நாக. தியாராஜன், தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் கோ.மனோகரன் நன்றி கூறுகிறார்.



தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், மல்லிப்பட்டினம் அரசு மேல்நிலைப் பள்ளியில் கத்தியால் குத்தப்பட்டு உயிரிழந்த தற்காலிக ஆசிரியை செல்வி.ரமணி இறந்ததையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப்பட்ட பொது நிவாரணத் தொகை ரூ.5,00,000/க்கான காசோலையை உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் ஆசிரியையின் தாயார் முத்துராணி என்பவரிடம் வழங்கினார். அருகில் தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ, ச.முரசொலி எம்.பி, என்.அசோக்குமார் எம்.எல்.ஏ உள்ளிட்ட அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.



திருப்பூர் மாவட்டம், தாராபுரம் சித்ராவுத்தன்பாளையம் நகராட்சி நடுநிலைப்பள்ளி அங்கன்வாடி மையத்தில் ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டத்தின் கீழ் ஊட்டச்சத்து பெட்டகங்களை மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் தாய்மார்களுக்கு வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், தாராபுரம் நகர கழக செயலாளர் எஸ்.முருகானந்தம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கேஎஸ்.தனசேகர், நகர்மன்றத் தலைவர் கு.பாப்புக்கண்ணன், மாவட்ட திட்ட அலுவலர் (பொ)(ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டம்) க.மகாலட்சுமி சங்கீதா ஆகியோர் உள்ளனர்.



அரியலூர் மாவட்டம் குன்னம் தொகுதி செந்துறையில் அரசு பள்ளியில் 10 ஆம் வகுப்பு, 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ–மாணவிகள் பயன் பெறும் வகையில் தேர்வை வெல்வோம் வினா விடை புத்தகங்களை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தமது சொந்த செலவில் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கினார். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், பள்ளி ஆசிரிய பெருமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.